வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – நாராயணசாமி

தேதி 13.01.2025 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

ஜம்மு-காஷ்மீரில் சோனாமார்க் சுரங்கப் பாதையை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று திறந்து வைத்தார்.

உலகின் மிகப் பெரிய ஆன்மீகத் திருவிழாவான மகா கும்பமேளா உத்திரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் தொடங்கியது.

பொங்கல், மகரசங்கராந்தி, லோஹ்ரி, மற்றும் மகாபிஹு பண்டிகைகளை ஒட்டி தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

உலக கோப்பை கோ-கோ போட்டிகள் புதுடெல்லி இந்திராகாந்தி உள் விளையாட்டு அரங்கில் இன்றிரவு 8.30 மணிக்கு தொடங்குகின்றன.

மோடி சுரங்கபாதை 1 (18)

ஜம்மு-காஷ்மீரில் சோனாமார்க் சுரங்கப் பாதையை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று திறந்து வைத்தார். சுரங்கப்பாதையை திறந்து வைத்த பிரதமர் உள்ளே சென்று ஆய்வு செய்தார். சுரங்கப்பாதை வடிவமைப்பு குறித்து அதிகாரிகள் அவருக்கு எடுத்துக் கூறினர். சோனாமார்க் சுரங்கப்பாதையானது ஸ்ரீநகரில் இருந்து லே-செல்லும்

சாலையில் அனைத்து பருவ காலங்களிலும் பயணத்தை மேற்கொள்ளும் வகையில் அமைக்கப்பபட்டுள்ளது. 12 கிலோ மீட்டர் நீளமுள்ள இந்த சுரங்கப்பாதை 2 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. ஏற்கனவே பயன்பாட்டில் இருந்த சாலையில் அடிக்கடி நிலச்சரிவு மற்றும் பனிச்சரிவு ஏற்பட்டதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டு வந்தது. தற்போது திறக்கப்பட்டுள்ள இந்த சுரங்கப் பாதையால் இயற்கை சீற்றங்களின் போதும் போக்குவரத்து தடையின்றி நடைபெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. திறப்பு விழா நிகழ்ச்சியில் மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி, அறிவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை இணையமைச்சர் திரு அஜய் தம்தா, ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா முதலமைச்சர் திரு உமர் அப்துல்லா, ஜம்மு காஷ்மீர்



யூனியன் பிரதேச அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர். இந்த சுரங்கப்பாதையானது ககன்கீர் மற்றும் சோனாமார்க் இடையே தடையற்ற தொடர்பை ஏற்படுத்துவதுடன், இப்பகுதிகளில் வளர்ச்சிக்கும் வழி கோல்கிறது.

சுரங்கப்பாதையில் அதி நவீன தொழில்நுட்பங்கள் பொருத்தப்பட்டுள்ளது. இந்த சுரங்கப்பாதை அமைக்கும் பணி 2015 ஆம் ஆண்டு தொடங்கி, கடந்த ஆண்டு நிறைவு பெற்றது. இதன் மூலம் சோனாமார்க்கில் உள்நாட்டு மற்றும் சர்வதேச சுற்றுலா மேம்படுவதோடு, வர்த்தகமும் மிகப் பெரிய அளவில் வளர்ச்சி அடையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

*மகாகும்பமேளா* (10)

உலகின் மிகப் பெரிய ஆன்மீகத் திருவிழாவான மகா கும்பமேளா உத்திரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் இன்று தொடங்கியது. இந்த விழா அடுத்த மாதம் 26 ஆம் தேதி மகா சிவராத்திரி வரை நடைபெற உள்ளது. மகா கும்பமேளாவில் சுமார் 45 கோடி பேர் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. கும்பமேளாவை ஒட்டி அங்கு திரண்டுள்ள லட்சக்கணக்கான பக்தர்கள் கங்கை, யமுனை, சரஸ்வதி நதிகள் சங்கமிக்கும் திரிவேணி சங்கமத்தில் நீராடி வருகின்றனர். நேற்று 50 லட்சத்திற்கும் மேலான பக்தர்கள் புனித நீராடிய நிலையில், இன்று இதுவரை 90 லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் புனித நீராடியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ்)

மோடி வாழ்த்து (11)

மகா கும்பமேளா திருவிழா இன்று தொடங்கி உள்ளதை அடுத்து பிரதமர் திரு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். நாட்டின் தனிச் சிறப்பு மிக்க மாண்புகள் மற்றும் கலாச்சாரத்திற்கு உயிரூட்டும் வகையில், கோடிக்கணக்கான மக்கள் இந்த திருவிழாவில் கலந்து கொள்வது தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில் தெரிவித்துள்ளார். மகா கும்பமேளா நாட்டின் வளமான ஆன்மீக கலாச்சாரத்தையும், நம்பிக்கையையும், அமைதியையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது என்று பிரதமர் அதில் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவில் ஆன்மீக கலாச்சாரத்தின் பெருமை மிகு மாண்புகளை வெளிப்படுத்தும் இத் திருவிழா மக்களிடையே ஆற்றலையும், உற்சாகத்தையும் மேம்படுத்தட்டும் என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்தியுள்ளார்.

வாழ்த்து (13)

பொங்கல், மகரசங்கராந்தி, லோஹ்ரி, மற்றும் மகாபிஹு பண்டிகைகளை ஒட்டி குடியரசு தலைவர், துணை குடியரசு தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர். குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், நாட்டின் வளமான கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் இந்த பண்டிகைகள் நாட்டு மக்களிடையே வேற்றுமையில் ஒற்றுமை என்ற சிந்தனையை

வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது என தெரிவித்துள்ளார். இந்த பண்டிகைகள் மக்களிடையே மகிழ்ச்சியையும், வளத்தையும் ஏற்படுத்தட்டும் என்று அவர் தமது வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், நாட்டு மக்கள் அனைவரும் வெவ்வேறு பகுதிகளில் கொண்டாடும் இந்த அறுவடை திருவிழாவானது தொன்மை சிறப்பை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

*புதுச்சேரி வாழ்த்து* 1(18)

புதுச்சேரியில் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுவதை துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், தமிழர் பண்பாட்டின் அடையாளமான பொங்கல் திருவிழா இயற்கையையும், உழவுத் தொழிலையும் போற்றும் விழாவாகவும், தமிழர்களின் மாண்புகளையும், கலைகளையும் பெருமைப்படுத்தும் விதமாக கொண்டாடப்படும் இந்த பொங்கல் திருநாளில் அனைவரது வாழ்விலும் அன்பும், மகிழ்ச்சியும், நலமும் வளமும் பெருகட்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் திரு ரங்கசாமி வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், உழவின் சிறப்பையும், வேளாண்மைக்கு ஆதாரமாக விளங்கும் இயற்கை

மற்றும் கலாச்சாரத்தை போற்றும் விதமாகவும் கொண்டாடப்படும் தமிழர்களின் பாரம்பரிய பொங்கல் பண்டிகை அனைவரது இல்லங்களிலும் அன்பும், வளமும், செல்வமும் கொண்டு வந்து சேர்க்கட்டும் என்று தெரிவித்துள்ளார்.

உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், தமிழர்களின் முதன்மை பெருவிழா பொங்கல் திருநாள் நம் மரபுகளையும், பழங்கால வீர விளையாட்டுகளையும் வருங்கால தலைமுறையினருக்கு கொண்டு செல்லும் விதமாக கொண்டாடப்படுவதாக தெரிவித்துள்ளார்.

*புதுச்சேரி வாழ்த்து* 2(10)

குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு பி ஆர் என். திருமுருகன் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் சாதி மத பேதமின்றி, உற்றார் உறவினர் ஒன்று கூடி, குதுகலிக்கும் இந் நன்நாளில் அனைவரது வாழ்விலும், துன்பங்கள் மறைந்து, இன்பங்கள் பொங்கட்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

சட்டமன்ற எதிர்கட்சி தலைவர் திரு சிவா வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், வேற்றுமையின்றி ஒரே உணர்வோடு நமக்கு உணவு கொடுக்கும் இயற்கைக்கு நன்றி தெரிவித்து வணங்கும் ஒரே விழாவாக உலககெங்கும் பரவிக் கிடக்கும் தமிழர்களின் உணர்வு விழாவாக பொங்கல் கொண்டாடப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.

பொங்கல்-மக்கள் (5)

புதுச்சேரியில், தமிழர் திருநாளாம் பொங்கல் நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி, அதற்கான ஏற்பாடுகளில் மக்கள் ஈடுபட்டுள்ளனர். கடைகளுக்கு சென்று தேவையான பொருட்களை வாங்குவதில் மக்கள் ஆர்வம் காட்டுவதாகவும், புதுச்சேரி மட்டுமன்றி, அதனை சுற்றியுள்ள தமிழக பகுதிகளை சேர்ந்த மக்களும் நகரப்பகுதிக்கு வந்து செல்வதாக கூறுகிறார் எமது செய்தியாளர்.

(வாய்ஸ் )

விளையாட்டு (6)

புதுடெல்லி இந்திராகாந்தி உள் விளையாட்டு அரங்கில் உலக கோப்பை கோ-கோ போட்டிகள் இன்று தொடங்குகின்றன. இன்றிரவு 8.30 மணிக்கு நடைபெறும் போட்டியில், இந்திய ஆடவர் அணி, நேபாள அணியை எதிர்கொள்கிறது. 19 ஆம் தேதி வரை நடைபெறும்

இப்போட்டிகளில் ஆடவர் பிரிவில் நேபாளம், பெரு, பிரேசில், ஈரான் உள்ளிட்ட 20 அணிகளும், மகளிர் பிரிவில் 19 அணிகளும் பங்கேற்கின்றன.

திருவையாறு (4)

திருவையாறில் சத்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 178 ஆவது ஆராதனை விழா நாளை தொடங்குகிறது. விழாவின் முக்கிய நிகழ்வான ஆராதனை மற்றும் பஞ்சரத்ன கீர்த்தனைகள் இசைத்தல் வரும் 18 ஆம் தேதி நடைபெறுகிறது.

வானிலை (5)

குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் நிலவும் வளி மண்டல் கீழடுக்கு சுழற்சி காரணமாக அடுத்த மூன்று நாட்களுக்கு தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும் இடி-மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மோடி (18)

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை நடைபெற உள்ள இந்திய வானிலை ஆய்வுத் துறையின் 150 ஆவது தின கொண்டாட்டங்களில் பங்கேற்கிறார். புதுடெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெறும் விழாவில் பங்கேற்கும் பிரதமர் மிஷன் மவுசம் திட்டத்தை தொடங்கி

வைக்கிறார். அதி நவீன வானிலை கண்காணிப்பு தொழில்நுட்பங்கள், உயர் தெளிவுத் திறன் கொண்ட வளி மண்டல் கணிப்புகள், அடுத்த தலைமுறை ரேடார்கள், செயற்கை கோள்கள் மற்றும் உயர் செயல் திறன் கொண்ட கணினிகள் ஆகியவற்றை கொண்டு துல்லியமாக வானிலை மற்றும் பருவநிலையை கணிக்கும் வகையில் இந்த திட்டம் வடிவமைக்கப் பட்டுள்ளது. இவ்விழாவின் போது வானிலை மாற்றங்களை எதிர் கொள்ளும் திறன் மற்றும் பருவநிலை மாற்றங்களுக்கு ஏற்ப கட்டமைப்புகளை உருவாக்குதல் குறித்த இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தொலைநோக்கு பார்வை 2047 என்ற ஆவணத்தையும் பிரதமர் வெளியிட உள்ளார். இந்த கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக கடந்த 150 ஆண்டுகளில் இந்திய வானிலை ஆய்வுத் துறையின் சாதனைகள் மற்றும் அரசுத் துறைகளின் பங்களிப்போடு மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள் உள்ளிட்டவைகள் குறித்து தொடர்ச்சியான நிகழ்வுகள் மற்றும் பயிலரங்குகளுக்கும் இந்திய வானிலை ஆய்வுத் துறை ஏற்பாடு செய்துள்ளது.